# பூச்சியம் முதல் மூன்று வயது வரைக்கும் உள்ள குழந்தைகளுடைய தொடர்புத் திறன்களை விருத்திசெய்தல்.

**உங்கள் குழந்தை பேச முன்பே, அவர்களுடன் நீங்கள் பகிர்ந்துகொள்ளும் சாதாரண அன்றாட உரையாடலின் அளவுதான், அவர்கள் பள்ளியில் நன்றாகச் செயல்புரிய உதவி செய்கிது.**

கைக்குழந்தைகளும், இளைய குழந்தைகளும், பேசக் கற்றுக்கொள்ளும் முன்பே தகவல் பரிமாற்றத்தைக் (இன்னொரு நபருடன் தகவலை பரிமாறிக்கொள்ளுதல்) கற்றுக்கொள்கிறார்கள். அவர்கள், தங்களைச் சுற்றியுள்ள மக்களுடன் தினமும் தொடர்புகொள்ளும்போது, கருத்துகளை அல்லது உணர்வுகளை பரிமாறக் கற்றுக்கொள்கிறார்கள். அவர்கள், தங்களுடைய தேவைகளையும், உணர்ச்சிகளையும், அனுபவங்களையும் சைகைகள் வாயிலாகத் தெரிவிக்கும்போது, மற்றவர்களைக் கவனிக்கிறார்கள் அத்துடன் உற்றுக்கேட்கிறார்கள்.

இளம்பிள்ளைப் பருவத்தில் பெறும் நல்ல தொடர்புத்திறன்கள் நல்ல மொழித்திறனுக்கும் எழுத்தறிவுக்கும் வழிகாட்டும் (வாசிப்பும் எழுதுதலும்).

குழந்தைகள் எப்போதும்˙:

உற்றுக்கேட்கிறார்கள் - கருப்பையிலிருக்கும் போதுகூட

பார்க்கிறார்கள் - குழந்தைகள் பேசுவதற்கு முன்பு கண் தொடர்பு மிகவும் முக்கியமானது

முகங்களைப் புரிந்து கொள்கிறார்கள் - மிகைப்படுத்தப்பட்ட முகங்கள் குழந்தையின் கவனத்தைப் பற்றிக்கொள்கிறது

**மூளை வளர்ச்சி**

உங்கள் குழந்தையின் வாழ்க்கையில், ஏனைய நேரங்களைவிட முதல் மூன்று வருடங்களில் தான் மூளை மிகவும் விரைவாக வளர்கிறது, மேம்படுகிறது.

முதல் மூன்று வருடங்களும், உங்கள் குழந்தையின் மூளை பார்க்கவும், கேட்க்கவும் கற்றுக் கொள்ள உரிய பிரதானமான நேரமாகும். குழந்தைகள், அவர்களுடைய மூளை எப்படிப் பார்க்கிறது என்பதைக் கற்றுக் கொள்வதற்கு அசைவு,வடிவமைப்புகள் நிறங்கள் பொருள்கள் (அண்மையிலும் தூரத்திலும்) ஆகியவற்றை பார்க்க வேண்டியது அவசியம். குழந்தைகள் சத்தத்தைக் கேட்கும் புரிந்து கொள்ளும் ஆற்றலை மேம்படுத்துவதற்கு பலவிதமான சத்தங்களை நிறையக் கேட்க வேண்டியது அவசியம்.

மொழியை விருத்தி செய்யவும், பேசக் கற்றுக் கொள்ளவும் உரிய பிரதானமான காலம் வாழ்க்கையின் முதல் சில ஆண்டுகள் ஆகும். குழந்தைகளுக்காக எல்லா நேரமும் நீங்கள் பேசுவதையும், பாடுவதையும், வாசிப்பதையும் அவர்கள் கேட்க வேண்டியது அவசியம். குழந்தைகள் மழலை மொழியில் பேசும் போதும் உங்களுடைய தகவல் பரிமாற்றத்தை அவர்களும் செய்ய முயற்சி செய்யும் போதும் நீங்கள் அவர்களுடன் பேசுவது அவசியம்.

**நீங்கள்தான், உங்கள் குழந்தையின் முதலாவதும் மிக முக்கியமான ஆசிரியர்**

- உங்கள் குழந்தை பேசுவதை உற்றுக் கேளுங்கள்
- உங்கள் குழந்தையுடன் பேசுங்கள்
- ஒன்று சேர்ந்து பாடல்களையும் ஒலி இயைபுச் சொற்களையும் பகிர்ந்து கொள்ளுங்கள்
- ஒன்று சேர்ந்து புத்தகங்களை வாசியுங்கள்
- ஒன்று சேர்ந்து புதிய இடங்களுக்குச் செல்லுங்கள்
- வீட்டில் விளையாடுவதற்கு நிறையப் பல விதமான பொருட்களைக் கொடுங்கள்
- அவர்கள் நன்றாகச் செயல் புரிகின்றார்கள் என்பதை அவர்களுக்குத் தெரிவியுங்கள்

நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்:

பிள்ளைகளுடன் விளையாடுவது, அவர்கள் தகவல் பரிமாற்றம் செய்யக் கற்பிக்கின்றது. தொலைக்காட்சி நிகழ்சிசிகளும், கணிப்பொறி விளையாட்டுகளும், நிகழ்ச்சிகளும், இலக்கமுறை மீநுட்ப வட்டு (DVD) மின் அட்டைகளும் கல்வி சார்ந்தவைகளாயிருந்தாலும் கூட, குழந்தைகள், அவர்களுடைய தொடர்புத்திறனை விருத்தி செய்ய உதவி செய்யாது. மக்களுடன் பேசுவதினால் மட்டுமே குழந்தைகள் தங்களுடைய தொடர்புத் திறன்களை வளரச் செய்ய முடியும்

